People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்



மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-03
## 22.02.2008 முதல் 28.02.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 264. | 22.02.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** தமிழக அரசு சிவில் வழக்குகளில் காவல்துறையினர் ஈடுபடக் கூடாது என்று தமிழக சட்டமன்றத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குரும்பூர் காவல் நிலைய சப்–இன்ஸ்பெக்டர் மாரியப்பன், இடம் சம்பந்தமாக திருச்செந்தூர் நீதிமன்றத்தில் வழக்கு இருந்து வரும் நிலையில் மிக்கேல் பரினாந்து என்பவரை வலுக்கட்டாயமாக காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து பொய் புகார் போட்டு தாக்கியுள்ளார். இது குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. | காவல் வன்முறை | ஜனசக்தி |
| 265. | 22.02.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி அருகே உள்ள தருகைக்குளத்தைச் சேர்ந்தவர் முருகன். இவர் தனியார் நிறுவனத்தில் ஊழியராக பணிபுரிந்து வருகிறார். இவரின் மனைவி ரேவதி (23) முருகன் குடித்து விட்டு வந்து ரேவதியை கொடுமைப்படுத்தி உள்ளார். இதில் முருகன் ரேவதியை அரிவாளால் வெட்டியுள்ளார். இது குறித்து தருவைக்குளம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து தேடி வருகின்றனர். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 266. | 22.02.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** வேர்கிளம்பியை அடுத்துள்ள மாறான்கோணம் பகுதியைச் சேர்ந்தவர் செயக்குமார் (38) இவரது மனைவி மகேஸ்வரி இவர்களுக்கு ஒரே பிரசத்தில் இரண்டு குழந்தைகள் பிறந்தன. அதில் ஒரு குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை என்று அங்குள்ள தனியார் மருத்துவமனையில் மருத்துவம் அளிக்கப்பட்டது. மருத்துவர் ஒரு மருந்தை எழுதி கொடுத்தார். இதை வாங்கி குழந்தைக்கு கொடுத்துள்ளார். மருந்தை குடித்த சிறிது நேரத்தில் குழந்தை இறந்தது. இது குறித்து குலசேகரம் காவல் நிலையத்தில் புகார். | | |
| 267. | 22.02.09 | **கோவை மாவட்டம்:** நம்பியம்பிள்ளையம் கிராமம் அவினாசி வட்டம் சேர்ந்த அருந்ததியர் மக்கள் அதே பகுதியைச் சேர்ந்த நாடார் சமுகத்தினால் ஊரை விட்டு ஒதுக்கி வைத்த சம்பவம். | தலித்துகள் மீதான வன்முறை | Indian Express |
| 268. | 22.02.09 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி அதிகரை சுந்தராஜன் த/பெ. கருப்பன் என்பவரை குரக்குளம் பகதியைச் சேர்ந்த குமார் த/பெ. லிங்கம் மற்றும் மோனசுந்தரம் த/பெ. லிங்கத்துறை ஆகிய இருவரும் சேர்ந்து சுந்தரராஜன் சாதிய ரீதியாக திட்டியும், சித்திரவதை செய்த சம்பவம். இது குறித்து சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | ஓ ஆனந்த் |

| | | | | |
|---|---|---|---|---|
| 269. | 22.02.09 | **சிவகங்கை மாவட்டம்:** காஞ்சிரங்கள் பகுதியைச் சேர்ந்த தொட்டிச்சியம்மாள் க/பெ. வெள்ளைச்சாமி என்பவரை அதே பகுதியைச் சேர்ந்த பூபதி என்பவர் சாதிய ரீதியாக திட்டியும், சித்திரவதை செய்த சம்பவம். | தலித்துகள் மீதான வன்முறை | ஒ ஆனந்த் |
| 270. | 22.02.09 | **சிவகங்கை மாவட்டம்:** சமத்துவபுரம் அரசனூர் பகுதியைச் சேர்ந்த தமயநிதி க/பெ. பாலசுப்பிரமணி என்பவரை செய்யது முகம்மது ஹாஜயான் த/பெ. இஸ்மாயில் என்பவர் தமயந்தியை சாதிய ரீதியாக திட்டியும், சித்திரவதை செய்த சம்பவம். இது குறித்து சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | ஒ ஆனந்த் |
| 271. | 22.02.09 | **சிவகங்கை மாவட்டம்:** பெரியார்நகர் சேர்ந்த முருகன் த/பெ. சந்தானம் என்பவரை லட்சுமணன் த/பெ. மகாராஜா புதுப்பட்டியை சேர்ந்தவர் முருகனை சாதிய ரீதியாக திட்டியும், சித்திரவதை செய்த சம்பவம். இது குறித்து சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | ஒ ஆனந்த் |
| 272. | 22.02.09 | **சிவகங்கை மாவட்டம்:** கீழக்கோட்டை பகுதியைச் சேர்ந்த வெள்ளைசாமி த/பெ. அழகன், என்பவரை அதேப் பகுதியைச் சேர்ந்த கோபால் த/பெ. உடையப்பன் சாதிய ரீதியாக திட்டியும், சித்திரவதை செய்த சம்பவம். இது குறித்து மதகுப்பட்டி காவல் நிலையத்தில் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | ஒ ஆனந்த் |
| 273. | 22.02.09 | **சென்னை மாவட்டம்:** மேடவாக்கம் பொன்னிம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் அரிகரன் (33) இவரது மனைவி தனலெட்சுமி (24) அரிகரன் குடிப்பழக்கம் உடையவர். கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் அரிகரன் மனைவியை தீ வைத்து கொளுத்தினார். இது குறித்து பள்ளிக்கரனை போலீசில் வழக்கு பதிவு. | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 274. | 23.02.09 | **கோவை மாவட்டம்:** கோவை மத்திய சிறையில் சிறை வார்டன்கள் கைதிகள் இடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் 8 பேர் படுகாயம் அடைந்தனர். | காவல் வன்முறை | தமிழ்சுடர் |
| 275. | 23.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** முதுகுளத்தூர் அருகே 100 லிட்டர் ரேசன் மண்ணெணைய் சமையல் காஸ் சிலிண்டர்களை வருவாய்துறை பறக்கும் படையினர் பறிமுதல் செய்து 4 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர். | ரேசன் மண்ணெணைய் கடத்தல் | தமிழ்முரசு |
| 276. | 23.02.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை கோயில் பாப்பாகுடியைச் சேர்ந்தவர் முனியாண்டி இவரது மனைவி அழகம்மாள் (25). இவரை அதேப் பகுதியைச் சேர்ந்த பாண்டியன் அழகம்மாள் வீட்டிற்குள் நுழைந்து அவரை பலாத்காரம் செய்ய முயன்றார். புகாரின் பேரில் கூடல்புதூர் போலீசார் பாண்டியனை கைது செய்து செய்தனர். | பெண்கள் மீதான வன்முறை | |
| 277. | 23.02.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** நாக்குநேரியை அடுத்த ஸ்ரீரெங்கராஜபுரத்தைச் சேர்ந்தவர் சேகர் (40) இவரது மனைவியின் தங்கை அருணாச்சலவடிவு (36) இவர் சிதம்பரத்தில் கணவனுடன் வசித்து வருகிறார். அதே பகுதியைச் சேர்ந்த திருமணமான சேர்மதுரை (40) என்பவர் அருணாசலவடிவின் 5 வயது மகன் நம்பிசெல்வத்தை பாலியல் பலாத்காரம் செய்ததினால் | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிறுமி இறந்தார். இது குறித்து காவல் நிலையத்தில் புகார். | | |
| 278. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** முகப்பேரில் வசித்து வருபவர் உமா மகேஸ்வரி இவரது மகள் திலகா (16) இவரை இசை ஆசிரியர் டேவிட் மாணவி திலகாவிடம் பாலியல் சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளார். இது குறித்து ஜெ.ஜெ. நகர் போலீசில் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 279. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** சென்னை அடுத்த செங்குன்றத்தைச் சேர்ந்தவர் கணேசன் இவருடைய மகள் கவிதா இவரை எம்.ஜி.,ஆர் தெருவைச் சேர்ந்த கார்த்திக் (21) திருமணமானவர். இவர் கவிதாவிடம் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைக் கூறி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது குறித்து செங்குன்றம் போலீசார் வழக்கு பதிவு. | குழந்தைகள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 280. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** சென்னை புறகர் பகுதியான மேற்கு அண்ணாநகர் விரிவு அரசு ஊழியர் குடியிருப்சை் சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி இவரது மனைவி ராஜகுமாரி (48) கிருஷ்ணமூர்த்தி குடிபழக்கம் உடையர். கணவன் மனைவியிடையே ஏற்பட்ட குடும்ப பிரச்சனையில் கிருஷ்ணவேணி ராஜகுமாரி மண்ணெணைய் ஊற்றி எரிக்க முயற்சித்தார். எரியும் தீயுடன் மகணவரைக் கட்டிப்பிடித்து இருவரும் படுகாயம். அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இது குறித்து கொரட்டூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | |
| 281. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் வசிப்பவர் பாரதி (30) இவரை நுங்கம்பாக்கம் போக்குவரத்து போலீஸ் கண்ணன், என்பவர் திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஏமாற்றி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது குறித்து நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் அல்லை. போலீஸ் கமிஷனர் ராதாகிருஷ்ணனிடம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 282. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** அயனாவரம் வீராசாமி தெருவைச் சேர்ந்தவர் பாலன் (68) இவரது மனைவி லோகநாயகி இவர்களது மகன் தேவேந்திரன் (290 பாலனுக்கு சொந்தமாக வீடு மற்றும் கடைகளை தன் பெயருக்கு மாற்றிக் கொடுத்தால் தேப்வேந்திரன் லோகநாயகியை தலையணையால் அழுத்தி கொலை செய்ய முயற்சி. இது குறித்து அயனாவரம் போலிசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 283. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** ஐ.சி.எல் காந்தி நகரைச் சேர்ந்தவர் நந்தகுமார் (16) அதே பகுதியைச் சேர்ந்தவர் தீபாவிடம் பாலியில் தொந்தரவு. இது குறித்து ஐ.சி.எல். போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 284. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** இழுப்பைத்தோப்பு தெருவைச் சேர்ந்தவர் மாடசாமி (25) லாரி டிரைவர். இவரது மனைவி நாகவல்லி (21) திருமணமான 9 மாதத்திற்கு நாகவல்லி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து பல்லாவரம் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| 285. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** திருவொற்றியூர் கலைஞர்நகர் 12 வது தெருவைச் சேர்ந்தவர் அருண் (27) லாரி டிரைவர் இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த சிதம்பரம் என்பவரது மகள் பிரமிளாவுக்கு (19) 7 மாதங்களுக்கு முன் திருமணம் நடந்தது. வரதட்சணை தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாட்டில் பிரமிளா தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து சாத்தாங்காடு போலீசார் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 286. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** சிட்லப்பாக்கம் வீரபாண்டி தெருவைச் சேர்ந்தவர் சிவசுப்பிரமணி மத்திய அரசின் ஆயில் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவன ஊழியர். இவரது மனைவி மணிமேகலை (42) சிவசுப்பிரமணி குடித்துவிட்டு மனைவியை துன்புறுத்தியுள்ளார். இது குறித்து சிட்லம்பாக்கம் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 287. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** சென்னை அடுத்த மதுரபாக்கம் அருகே உள்ள காட்டுப்பகுதியில் முகம் எரிந்த நிலையில் பெண்ணின் பிணம். இது குறித்து புறநகர் போலீசார் விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 288. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** சென்னை அருகே உள்ள ஆவடி பூம்பொழில்நகர் மகிழம்பூ தெருவைச் சேர்ந்தவர் ரதிதேவி (24). இவர் தன் பெற்றோரிடம் தனக்கு புனேயில் கிடைத்துள்ளது என்று கூறி விட்டது தனது காதலன் அலெக்சுடன் ஒரே வீட்டில் கணவன், மனைவி போல் வசித்து வந்தனர். இந்நிலையில் அலெக்சுடன் தகராறு ஏற்பட்டதால் ரதிதேவி மண்ணெணைய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து ஆவடி டேங்க் பேக்டரி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 289. | 23.02.09 | **திருச்சி மாவட்டம்:** திருச்சியை அடுத்த துவாக்குடி ராவுத்தர் மேடுத்தெருவைச் சேர்ந்தவர் மாரிமுத்து மகள் கிருஷ்ணமூர்த்தி (45) பொது மக்களின் கவனத்தைத் திசை திருப்பி பணம் கொள்ளையடித்ததாக திருப்பி வடக்கு காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் திருச்சிக்கு வந்து விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவரை மர்மமான முறையில் இறந்து விட்டார். அவரை போலீசார் அடித்துக் கொன்றதாக மனைவி புகார். | காவல் வன்முறை | பிரபாகர், RMA |
| 290. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** தாம்பரம் அருகே சோலையூர் காட்டூர் பகுதியில் கைகள் கட்டப்பட்ட நிலையில் நிர்வாணமாக பெண் பிணம் கிடந்தது. இவரை கற்பழித்து கொலையா? என சோலையூர் காவல் நிலையத்தினர் விசார்த்து வருகின்றனர். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 291. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** ஆவடி அடுத்த திருமுல்லைவயர் மணிகண்டபுரம் 7வது தெருவைச் சேர்ந்தவர் ராஜேந்திரன். இவரது மகள் சரண்யா (23). இவருக்கும் தாம்பரம் தெய்வானை நகரைச் சேர்ந்த பிரவீன்குமார் (27) என்பவருக்கும் கடந்த ஆண்டு | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திருமணம் நடந்தது. கணவன் மார்டனாக உடை அணியவில்லை என்று திட்டியதால் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து ஆவடி போலீஸ் உதவி கமிஷனரிடம் புகார் பதிவு | | |
| 292. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** குரோம்பேட்டை கணபதிபுரம் கிருஷ்ணசாமி தெருவைச் சேர்ந்தவர் வெங்கடேஷ் குமார் (32) இவரது மனைவி சுஜாதா (28) இவர்களுக்கு ஒரு மகள் உள்ளது. இவரது கணவர் கூடுதல் வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்ததால் சுஜாதா தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து சிட்லபாக்கம் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 293. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** மீனம்பாக்கம் விமானநிலையம் விரிவாக்க திட்டத்தால் 5,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் வாழ்வுரிமை இயக்க செயலாளர் பிருந்தா குற்றம் சாட்டியுள்ளார். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 294. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** பெரும்பாக்கம் வீரபத்திரநகர் வனத்துறை குடியிருப்பைச் சேர்ந்தவர் அருண்குமார். இவரது மனைவி சித்ராதேவி (22) திருமணமாகி 3 ஆண்டுகள் ஆகிறது. பிரியதர்சன் என்ற 2 மாதக் குழந்தை உள்ளது. குழந்தைக்கு கொலுசு வாங்க பணம் வாங்கி வா என்று துன்புறுத்தியதால் சித்ராதேவி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 295. | 23.02.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** பாலுசெட்டி சத்திரம் அடுத்த சமத்துவபுரத்தைச் சேர்நதவர் தேவிராஜ். இளநீர் வியாபாரி. இவரது மனைவி லெட்சுமி (37) இவர்களுக்கு ஒரு மகன் உள்ளார். தேவராஜூடன் மதியழகன் என்பவர் இளநீர் வியாபாரம் செய்தார். லட்சுமியை ஆசைக்கு இணங்கும்படி மதியழகனுக்கு தேவேந்திரனும் அவரது கையை பிடித்து இழுத்து கொலை செய்தனர். இது குறித்து பாலுசெட்டி சத்திரம் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 296. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** தாம்பரம் அருகே வனப்பகுதியில் ஒரு பெண் எரித்துக் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இது குறித்து சோலையூர் போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். | பெண்கள் மீதான வன்முறை | பிரபாகர், RMA |
| 297. | 23.02.09 | **சென்னை மாவட்டம்:** மதுராவயல் அருகே உள்ள பி.எம்.ஆர். இன்ஜினியரிங்க கல்லூரியில் அடிப்படை வசதிகள், ஆய்வக வசதியல் இல்ல. ஆனால் கல்லூரிக்கு விளக்கம் கேட்டு ஷோகஸ் நோட்டிஸ் அனுப்பும்படி அன்று அண்ணா பல்கலை துணைவேந்தர் மன்னர் ஜவகர் கடந்த சில நாட்களாக முன் கூறினார். கல்லூரி மாணவர்கள் தங்களை வேறு கல்லூரிக்கு மாற்ற வேண்டும் என வலியுறுத்தி 500 அதிகமான மாணவர்கள் தொழில்நுட்ப கல்வி இயக்குனர் அலுவலகத்தில் போராட்டம் நடத்தினர். போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது போலீஸ் தடியடி. | காவல் வன்முறை | பாஸ்கர் RMA |
| 298. | 23.02.09 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அருகே ஆந்திராவுக்கு லாரியில் கடத்திய 5 டன் ரேசன் | ரேசன் அரிசி கடத்தல் | பாஸ்கர், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அரிசியை அதிகாரிகள் மடக்கி பிடித்தனர். | | |
| 299. | 23.02.09 | **வேலூர் மாவட்டம்:** ஊரூர் அடுத்த புதூர் காலனியைச் சேர்ந்தவர் பாபு இவரது மனைவி லதா (26). பாபு குடிபழக்கம் உடையவர், தினமும் குடித்து விட்டு துன்புறுத்தியுள்ளார். இதனால் மனமுடைந்த லதா தன் இரண்டு குழந்தைகளுடன் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 300. | 23.02.09 | **சிவகங்கை மாவட்டம்:** சேலிங்கராமன் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நல்லூர் தலித் செல்வராஜ் சேலைமேரி ஆகிய இருவரையும் அப்பகுதி சாதி இந்துக்கள் தாக்கினார்கள். | தலித்துகள் மீதான வன்முறை | ஆனந்த், RMA |
| 301. | 24.02.09 | **மதுரை மாவட்டம்:** பேரையூர் தாலுகாவில் திருட்டு தனமாக அனுமதியின்றி மணல் அள்ளப்படுவதாக தாசில்தார் பன்னீர்செல்வத்திடம் புகார். அந்த பகுதியில் உள்ள எழுமலை, டி கிருஷ்ணாபுரம், சூப்புவும் அதிகாரிபட்டி ஆகிய இடங்களில் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டார். அப்போது அரசு அனுமதியின்றி மணல் கடத்திய 5 டிராக்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டது. | மணல் கடத்தல் | தினத்தந்தி |
| 302. | 24.02.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உள்ள கீழவளவை சேர்ந்தவர் பாண்டி என்ற துரைப்பாண்டி. இவருக்கும் கிழவளவு அருகே உள்ள காயாம்பட்டியைச் சேர்ந்த சின்னக்கண்ணன் மகள் ஆனந்திக்கும் ஒரு வயதில் குழந்தை உள்ளது. துரைபாண்டி தனி குடித்தனம் வர மறுத்ததால் ஆனந்தி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 303. | 24.02.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** திருவையாறு ஒன்றியம் கடமங்குடி கிராமத்தில் சுமார் 50 தலித் குடும்பங்கள் உள்ளன. இவற்றுள் 10 கிறிஸ்துவ தலித் குடும்பங்களும் இடக்கம். கிறிஸ்தவ தலித்துகளுக்கு கல்லறை பாதை இதுவரை இல்லை. சுடுகாடு பாதை கேட்டு தலித் மக்கள் ஆதிதிராவிடர் நலத்துறை தாசில்தாரிடம் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 304. | 24.02.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே உள்ள பனையூர் இவ்வூரைச் சேர்ந்தவர் மாயாண்டி. இவரது மகன் பாலகிருஷ்ணன் (28) இவரது மனைவி சுந்தரவல்லியுடன் திருப்பூரில் வேலை பார்த்து வருகிறார். சுந்தரவல்லிக்கு மாமனார் மாயாண்டிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. மாயாண்டி வீட்டிலிருந்து ஆசிட் பாட்டிலை எடுத்து மகள் மீது வீசினார். ஆசிட் தெறித்து பாலகிருஷ்ணன் சுந்தரவல்லி மீது ப டது. இது குறித்து அவனியாபுரம் போலீசார் விசாரித்து வருகின்றனர். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 305. | 24.02.09 | **காரைக்கால் மாவட்டம்:** திருமலைராயன்பட்டினம் கொம்மியும் பஞ்சாயத்து முதலிமேடு குளோரேட் கம்பெனி வருவதற்கான தயாரிப்பு பணிகள் துவங்கிய நிலையில் மக்கள் அவற்றை எதிர்த்து போராட்டம் நடத்தினார். போலீசார் தடியடி நடத்தினர். | காவல் நிலைய வன்முறை | திருமுகம் RMA |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 306. | 23.02.09 | **காரைக்கால் மாவட்டம்:** வடகட்டளை ஜீவாநகரைச் சேர்ந்த சரவு என்பவரை அவருடைய கணவர் அழகப்பன் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதால் சரசு தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம், RMA |
| 307. | 24.02.09 | **காரைக்கால் மாவட்டம்:** பி.ஆர். பட்டனம், கட்டபிள்ளைமரக்காயர் தெரு இராஜேஸ்வரிக்கு (14) ஊர் பஞ்சாயத்து மூலம் கட்டாயத் திருமணம். | குழந்தை திருமணம் | பாஸ்கர், RMA |
| 308. | 24.02.09 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அடுத்த சேன்பாக்கத்தைச் சேர்ந்தவர் சதீஸ்குமார் (21) இவர் அரசு பள்ளி முன் நின்று கொண்டு இருந்தார். அப்போது பள்ளிக்கு வந்த மாணவி ஜெயாவை (14) கிண்டல் செய்து தரக்குறைவாக பேசி திட்டியுள்ளார். இது குறித்து வேலூர் தாலுகா போலீஸ் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 309. | 24.02.09 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அடுத்த ஆலங்காயம் பகுதியைச் சேர்ந்தவர் சுமதி (28) இவர் அங்குள்ள அரசு பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகின்றனர். ஆலங்காயம் அடுத்த பூங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் எழில் (34) வியாபாரி. இவரது மனைவி தேவி கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக தேவி சுமதி ஆசிரியை வீட்டில் வாடகைக்கு குடியேறிருந்தார். எழில் தன் மனைவியை அழைப்பதற்கு வந்தபோது ஆசிரியை சுமதியை கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இது குறித்து ஆலங்காயம் போலிசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் RMA |
| 310. | 24.02.09 | **வேலூர் மாவட்டம்:** ராணிப்பேட்டை வாணாபாடி சாலையில் பாரதிநகர் பகுதியில் உள்ள தனியார் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கும் சாலைக்கும் இடை 50 சென்ட் பாசன கிணறு மற்றும் சுண்ணாம்பு கால்வாய் இருந்தது. அந்நிலத்தையும் தனியார் நிர்வாகம் ஆக்கிரமித்து சுற்றுசுவர் கட்டியுள்ளது. பாரதிநகருக்கு செல்லும் பாதையை அடைத்துள்ளனர். அப்பள்ளிக்கு சென்ற மாட்டின் மீது ஆசிட் விசியுள்ளனர். இது குறித்து பொது மக்கள் ஆர்பாட்டம் நடததினர். | | பாஸ்கர், RMA |
| 311. | 24.02.09 | **வேலூர் மாவட்டம்:** திருப்பத்தூர் ஏரிக்கரை பகுதியில் வசிப்பவர் நாசர் பீடி தொழிலாளி. இவரது மனைவி மும்தாஜ். இவருடைய ஆண் குழந்தையை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் திருட்டு போனது இது குறித்து காவல் நிலையத்தில் புகார். | | |
| 312. | 24.02.09 | **வேலூர் மாவட்டம்:** காட்பாடி அடுத்த வடவிரிஞ்சிபுரம் கிராமம் வடகரை பகுதியைச் சேர்ந்தவர் மார்கபந்து மனைவி வளர்மதி. பொது இடத்தில் மாட்டுசாணம் கொட்டுவது தொடர்பாக மார்கபந்துக்கும் அண்ணன் சாமிநாதன் குடும்பத்துக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் மார்கபந்து மனைவியை சாமிநாதன் குடும்பத்தினர் தாக்கியுள்ளனர். இது குறித்து லத்தேரி காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 313. | 24.02.09 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அடுத்த நாயக்கனேரி பகுதியைச் சேர்ந்தவர் கணேன் இவரது மனைவி கண்ணகி (35). இவரது மகள் நிஷாந்தி (19) இவர் வேலுரில் உள்ள தனியார் பயிற்சி பள்ளியில் படித்து வருகிறார். இவரை ஆள்காட்டான் குடிசை பகுதியைச் சேர்ந்தவர் ரமேஷ் என்பவர் கேலி, கிண்டல் செய்தாக வேலூர் தாலுகா போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர், RMA |
| 314. | 24.02.09 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அருகே உள்ள வெங்கடசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சின்னசாமி. இவரது மகள் லட்சுமி கடந்த 3 நாட்களுக்கு முன்பு தனது தாயுடன் மருத்துவமனைக்கு சென்றவர் காணவில்லை. இது குறித்து பாகாயம் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர், RMA |
| 315. | 24.02.09 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் மாவட்டம், ஆற்காடு தனபால் தெருவைச் சேர்ந்தவர் மணி. இவரது மகள் விஜயகுமார் (24) இவரது மனைவி செல்வி (20) விஜயகுமாருக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு இருந்ததால் இதனை தட்டிக் கேட்ட செல்வி கழுத்தை நெறித்து கொலை செய்தார். இது குறித்து ஆற்காடு டவுன் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர், RMA |
| 316. | 24.02.09 | **வேலூர் மாவட்டம்:** செங்குட்டை பகுதியில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சுபாஸ்ரீ என்ற மாணவியின் உடையில் தீ பிடித்து பரிதாபமாக இறந்தார். இது குறித்து காட்பாடி போலீசார் விசாரணை. | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர், RMA |
| 317. | 24.02.09 | **வேலூர் மாவட்டம்:** சோளிங்கர் தென் வன்னியர் தெருவைச் சேர்ந்தவர் ஜெயராமன் மகன் தினேஷ்குமார் (15). இவர் தனியார் பள்ளி ஒன்றில் 9ம் வகுப்பு படித்து வந்தார். ஆனால் மீண்டும் வீடு திரும்பவில்லை. இது குறித்து தினேஷ்குமாரிடம் தந்தை ஜெயராமன் சோளிங்கர் போலீசில் புகார் கொடுத்தார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர், RMA |
| 318. | 24.02.09 | **சேலம் மாவட்டம்:** சேலம் தனியார் பள்ளி விடுதியில் தங்கி படித்த திருச்சி மாணவர் மகேஸ்குமார் (18) மா்மமான முறையில் இறந்தார். பெற்றோருக்கு தகவல் அளிக்காமல் உடலை பிரேத பரிசோதனைக்கு கொண்டு சென்றார். இது குறித்து மல்லூர் போலீசார் விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர், RMA |
| 319. | 24.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** திருவண்ணாமலை அடுத்த மங்கலம் விஜயநகரத்தைச் சேர்ந்தவர் முனியப்பன் (55) இவரது மனைவி சாரதா (50). இவர்களுக்கும் கொசவன்குட்டை கிராமத்தை சேர்ந்த செந்தில்நாதன் (34) என்பவருக்கும் பொது வழி பிரச்சனையில் செந்தில்நாதன் குடும்பத்தினர் முனியப்பன் வீட்டிற்குள் நுழைந்து முனியப்பன் மனைவி சரோஜா மற்றும் மருமகள் ஜீவாவை தாக்கினர். இது குறித்து மங்கலம் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர், RMA |
| 320. | 24.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** தண்டராம்பட்டு அருகே காவேரியாம் பண்டியைச் சேர்ந்தவர் பொன்முடி | பெண்கள் மீதான | பாஸ்கர், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (20) இவர் தி.மலை அரசு கல்லூரியில் பி.எஸ்.சி படித்து வருகிறார். அதே பகுதியைச் சேர்ந்த எழுமலை நிலம் தொடர்பான முன் விரோதம் பிரச்சனையில் கல்லூரி மாணவர் உட்பட 5 பேர் தாக்கப்பட்டனர். இது குறித்து தண்டராம்பட்டு போலீசில் புகார். | வன்முறை | |
| 321. | 24.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் அருகே சாம்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர் சங்கர் (34) இவரது மனைவி உஷா. இவரை செய்யானந்தல் கிராமத்தைச் சேர்ந்த எழுமலை, குப்புசாமி, அன்பு, சீனு ஆகியோர் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றுள்ளனர். இது குறித்து போளூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர், RMA |
| 322. | 24.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கண்ணமங்கலம் அடுத்த கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சேட்டு மகள் சங்கீதா. கிருஷ்ணமூர்த்தி மகள் மீனா ஆகிய இரண்டு மாணவிகள் காணமல் போன மாணவிகள் மீட்பு. | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர், RMA |
| 323. | 24.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வந்தவாசி டவுன் கோட்டை காலனியைச் சேர்ந்தவர் துலுக்கானத்தம்மாள் (60) இவரது பேரன் பிரதீப் (25) இவர்கள் இருவரும் அதே பகுதியில் நடந்த கோவில் திருவிழாவில் கலந்து கொண்டனர். அப்போது பிரதீப்பிடம் 10 கொண்ட கும்பல் தகராறு செய்த காரணத்தினால் பிரதீப் வீட்டிற்கு சென்று வீட்டில் இருந்த பொருட்களை நொறுக்கினர். இது குறித்து துலுக்கானம்மாள் வந்தவசரி நீதித்துறை நடுவர் மன்றத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர், RMA |
| 324. | 24.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** தி. மலை அடுத்த தண்டராம்பட்டு அருகே உள்ள காவேரியாபூண்டி கிராமத்தைச் சேர்ந்தவர் ஏழுமலை (43) அதே ஊரைச் சேர்ந்தவர் சின்னதம்பி. இருவருக்கும் நிலத் தகராறில் சின்னத்தம்பி குடும்பத்தினர் ஏழுமலை மற்றும் இவரது மனைவி சிவகாமியை சரமாரியாக தாக்கியுள்ளனர். இது குறித்து தண்டராம்பட்டு போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர், RMA |
| 325. | 24.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** தி.மலை அருகே நிலத்தை அளந்து தர சொன்ன விவசாயி வைத்தியலிங்கத்திடம் 6 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய வி.ஏ.ஓ காளிதாஸ் கைது செய்யப்பட்டார். | லஞ்சம் | பாஸ்கர், RMA |
| 326. | 24.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வ.உ.சி நகரைச் சேர்ந்தவர் வேலு (400 இவரது மனைவி வித்யா (38) இவர்களுக்கு 2 மகள்கள். கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் வித்யா தனது உடலில் மண்ணெணைய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து தி.மலை டவுன் போலீசில் வழக்கு பதிவு. | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர், RMA |
| 327. | 24.02.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கலசபாக்கம் அருகே பள்ளி மாணவி தேவகியை குமார் என்பவர் கடத்தி சென்று திருமணம் செய்துள்ளார். இது குறித்து கடலாடி போலீசில் புகார் செய்தார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| 328. | 25.02.09 | **ஈரோடு மாவட்டம்:** மொடக்குறிச்சி அருகே எம். ஊஞ்சம்பாளையத்தைச் சேர்ந்தவர் சீனிவாசன். இவர் மொடக்குறிச்சி வட்டார இளைஞர் காங்கிரஸ் தலைவராக உள்ளார். இவரது தந்தை சமீபத்தில் இறந்து விட்டார். தந்தையின் சொத்து தகராறில் இவருடைய சகோதரி வாசகி மற்றும் சீனிவாசன் தகராறு ஏற்பட்டது. இது குறித்து மொடக்குறிச்சி போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பெருமாள் RMA |
| 329. | 25.02.09 | **கோவை மாவட்டம்:** வடவள்ளி 4வது வார்டு பகுதிக்குட்பட்டது ராஜீவ்காந்திநகர். இங்கு வசிக்கும் பலர் வாந்தி, பேதியால் கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டுள்ளனர். | சுகாதார கேடு | பெருமாள் RMA |
| 330. | 25.02.09 | **திருப்பூர் மாவட்டம்:** 13 வயதில் திருமணம் செய்து வைக்கப்பட்ட இளம்பெண் சுகன்யா. காதலன் கிருஷ்ணனுடன் சேர்த்து வைக்கும்படி திருப்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பெருமாள் RMA |
| 331. | 25.02.09 | **ஈரோடு மாவட்டம்:** மொடக்குறிச்சி அடுத்த காவேரிபாளையத்தை சேர்ந்தவர் விஸ்வநாதன் (4) விவசாயி. இவரது மனைவி கிருஷ்ணவே (40) விஸ்வநாதன் அக்காள் மகன் ரமேஸ்பாபு (39)க்கும் ஏற்பட்ட சொத்து தகராறில் ரமேஸ்பாபு தன் அத்தை கிருஷ்ணவேணியை தாக்கியுள்ளார். இது குறித்து மாலையம்பாளையம் போலீசில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பெருமாள், RMA |
| 332. | 26.02.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கச்சத்தீவு கடல் பகுதியில் மீன் பிடித்த தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் சுட்டதில் சூசை அந்தோணி பலத்த காயம் அடைந்தார். தாக்குதலில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் பலர் நேற்று இரவிலேயே கரை திரும்பினர். | மீனவர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 333. | 26.02.09 | **நாகப்பட்டினம் மாவட்டம்:** வேதாரண்யம் வட்டம், தலைஞாயிறு பகுதிக்குட்பட்ட பொது மக்கள் சாலை வசதி வேண்டி சாலை மறியல் செய்த போது போலீசார் தடியடி. | காவல் வன்முறை | திருமுகம், RMA |
| 334. | 26.02.09 | **நாகப்பட்டினம் மாவட்டம்:** வேதாரண்யம் வட்டம், தலைஞாயிறு காவல் நிலையத்தில் உள்ள காவலர்கள் ஐயப்பன் மற்றும் அன்புசெல்வன் இருவரையும் காவலர்கள் சாதி பெயர் சொல்லி திட்டி அடித்து சித்ரவதை செய்த சம்பவம். | காவல் நிலையச் சித்திரவதை | திருமுகம், RMA |
| 335. | 26.02.09 | **சென்னை மாவட்டம்:** சில நாட்களில் ஓய்வு பெறவுள்ள உழவர் சந்தை அதிகாரி முத்துபாண்டி (58) லஞ்சம் கேட்ட தலைமைச் செயலக உதவி வேளாண்மை அதிகாரி ராஜரத்தினம் (46) கைது. | லஞ்சம் | தினகரன் |
| 336. | 26.02.09 | **ஈரோடு மாவட்டம்:** உடுமலை தேவனூர் புதூர் ஆண்டியூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் 52 குழந்தைகள் படித்து வருகின்றனர். மதியம். சத்துணவு முட்டை சாப்பிட்ட குழந்தைகளுக்கு வாந்தி மற்றும் வயிற்று வலி. | பள்ளி வன்முறை | பெருமாள் RMA |
| 337. | 26.02.09 | **ஈரோடு மாவட்டம்:** ஒலகடம் அருகேயுள்ள தாளபாளையத்தைச் சேர்ந்த சுதாகர் (31). பவானியிலிருந்து ஒலகடம் செல்லும் தனியார் மினி | காவல் வன்முறை | பெருமாள் RMA |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பஸ்சில் நடத்துனராக பணி புரிந்தார். ஏற்கனவே அதே பஸ்சில் நடத்துனராக பணிபுரிந்த செம்புளிச்சாம் பாளையத்தைச் சேர்ந்த சுப்பரத்தினம் பணியாளர்களிடம் ரகளையில் ஈடுப்பட்டுள்ளார். இதை தட்டி கேட்ட சுதாகர் தாக்கப்பட்டார். இது குறித்து வெள்ளிதிருப்பூர் போலிசில் புகார். போலீசார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. | | |
| 338. | 26.02.09 | **ஈரோடு மாவட்டம்:** பெருந்துறை பழைய பேருந்து நிலையம் அருகே வசிப்பவர் தங்கமுத்து. இவரது மனைவி உத்தமி (32). இவர் விஜயமங்கலத்தில் மளிகை கடை வைத்திருக்கிறார். சேகர் கத்தியைக் காட்டி தகாத வார்த்தைகளால் திட்டிய சம்பவம் இது குறித்து பெருந்துறை காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பெருமாள், RMA |
| 339. | 26.02.09 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு பெரிய செங்கோடம்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் பாபு. இவரது மனைவி காயத்திரி. வீட்டின்அருகே முருங்கை மரத்தில் யாரோ முருக்கைக்காய் பறித்தனர். இதனை காயத்திரி திட்டியுள்ளார். இதைப் பார்த்த செல்வன் என்பவர் காயத்திரியின் கை விரலை கடித்துத் துப்பினார். இது குறித்து வீரப்பன்சத்திரம் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பெருமாள், RMA |
| 340. | 26.02.09 | **கோவை மாவட்டம்:** தாராபுரத்தில் கண்ணன் நகரில் வசித்து வருபவர் ஆசிரியர் சின்னச்சாமி. இவரது மனைவி சரண்யா. சரண்யா சமையல் செய்யும் போது சேலையில் தீப்பிடித்து இறந்தார். இது குறித்து தாராபுரம் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பெருமாள், RMA |
| 341. | 26.02.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** தேன்கனிகோட்டை அருகே உள்ள பெரியமல்ல அண்ணாமலை கிராமத்தைச் சேர்ந்தவர் நரசிம்மன். இவரது மனைவி நீலம்மாள். இவர்களுக்கு மாதம்மாள் (13) என்ற மகள் உள்ளார். இவருக்கு இவரது பெற்றோர் கட்டாய திருமணம் செய்ய மேற்கொண்டனர். இது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பெருமாள், RMA |
| 342. | 26.02.09 | **ஈரோடு மாவட்டம்:** டிராக்டர் டிரைவரிடம் 1000 லஞ்சம் ஒழிப்பு போலீசார் கைது. | லஞ்சம் | பெருமாள், RMA |
| 343. | 26.02.09 | **ஈரோடு மாவட்டம்:** அரச்சலூர் அடுத்துள்ள கஸ்தூரிபாய் கிராமம் ஜெயராம்புரத்தைச் சேர்ந்தவர் பழனிசாமி (40). இவரது மனைவிசுமதி (36) கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் சுமதி தாக்கப்பட்டார். இது குறித்து அரச்சலூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பெருமாள், RMA |
